பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 11 2025 FRIDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) **Ditwah** புயல் நாளை மறுநாள் அதிகாலை தமிழகத்தின் வட கடலோர பகுதியை நெருங்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2) புயல் பாதிப்புகளை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தமிழக அரசு கூறியுள்ளது.

3) தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4) அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் மற்றும் **Road Show**-க்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பினை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

5) உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Ditwah** புயல் நாளை மறுநாள் அதிகாலை தமிழகத்தின் வட கடலோர பகுதியை நெருங்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (1)— 44 Sec.)***

இந்த புயல் காரணமாக தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், சில இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும் என்று அவர் தெரிவித்தார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (2) — 61 Sec.)***

கடலோர பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த மூன்று தினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (3) — 36 Sec.)***

இதற்கிடையே, பொதுமக்கள் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினை பின்பற்றி அவசியம் இன்றி வெளியில் வருவதை தவிர்க்குமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில அவர் விடுத்துள்ள செய்தியில், புயல் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக 14 மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு 16 மாநில பேரிடர் மீட்புப் படைகளும், 12 தேசிய பேரிடர் மீட்புப்படைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்நிலையில், **Ditwah** புயல் எச்சரிக்கை காரணமாக மயிலாடுதுறையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — குருமூர்த்தி மணிகண்டன் — 40 Sec.)***

தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று காலை முதல் மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — லஷ்மணன் — 34 Sec.)***

மழை முன்னெச்சரிக்கை காரணமாக கடலூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் மற்றும் **Road Show**-க்களை நடத்துவதற்கென வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பினை சென்னை உயர்நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளது.

தலைமை நீதிபதி திரு ஸ்ரீவஸ்தவா, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி-யின் தமிழக பொறுப்பாளர் திரு பைஜெயந்த் பாண்டா கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசு பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருப்பதாக கூறினார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாக உள்ளது என்றும் திரு பைஜெயந்த் பாண்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அஇஅதிமுக ஆட்சி காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களை திமுக அரசு கைவிட்டு விட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கோவை மாவட்ட மக்கள் மற்றும் தொழில்துறையினர் புறக்கணிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது விளம்பரத்திற்காக செம்மொழி பூங்கா அவசர கதியில் திறக்கப்பட்டுள்ளதாகவும், 30 சதவீத பணிகள் முடிவடையவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*__மாவட்டச் செய்திகள்__*

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நீரிழிவு நோய் சிகிச்சை மற்றும் சிறப்பு பராமரிப்பு மையத்தினை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

தருமபுரி மவாட்டத்தில் 22 கோடி ரூபாய் அளவிற்கு மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு சதீஷ் கூறியுள்ளார்.

----------------

வேலூர் மாவட்டத்தில் வங்கிக்கணக்குகளில் உரிமை கோரப்படாமல் உள்ள தொகையை மீட்பதற்கான முகாம் இன்று நடைபெற்றது.

--------------------

திருச்சியில் புத்தக வாசிப்பை வலியுறுத்தி, மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

----------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் பன்முக வளாக குடியிருப்பு பகுதிகளில் நாளை காலை எட்டு மணி முதல், இரவு எட்டு மணிவரை வாக்காளர் சிறப்பு உதவி மையங்கள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ரோமானியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **15** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-11, 11-5, 12-10, 5-11, 11-7, 11-6** என்ற செட் கணக்கில், கொரியாவின் **Aim Minseo -**ஐ வென்றார்.

---------------

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி சர்மா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **21-13, 21-19** என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Lo Sin Yan Happy-**ஐ வென்றார்.

**Unnati Hooda,** மிதுன் மஞ்சுநாத் ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளிலும், ஹரிஹரன் அம்சகருணன் — **Treesa Jolly** இணை கலப்பு இரட்டையர் பிரிவிலும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**